# இந்தியத் துணைத் தூதரகம்

**யாழ்ப்பாணம்**

**செய்திக்குறிப்பு**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ சல்மான் குர்ஷித் அவர்கள் இலங்கைக்கான தனது முதலாவது பயணத்தின்போது ஒரு நாள் விஜயமாக எதிர்வரும் ஒக்டோபர் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தருகிறார். அவருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மேன்மைதங்கிய யஷ்வர்தன் குமார் சின்ஹா அவர்களும், புது டெல்லியிலிருந்து வெளிவிவகார அமைச்சின் முதுநிலை அதிகாரிகளும் இந்திய ஊடக குழுவினரும் வருகைதரவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அவர்கள் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களைச் சந்திப்பார். ஆளுநர் அவர்கள் வருகைதரும் அமைச்சரையும் அவரின் பிரதிநிதிகளையும் கௌரவிக்கும் வகையில் மதியபோசன விருந்தளிப்பார். கௌரவ அமைச்சர் அவர்கள் வட மாகாண சபையின் முதலமைச்சாராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கௌரவ சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களையும் சந்தித்து இருதரப்பு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவார். கௌரவ அமைச்சர் அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் தெல்லிப்பழையில் இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கட்டப்பெறும் வீடுகளுக்கு விஜயம் செய்து ஒருசில பயனாளிகளுடன் கலந்துரையாடுவார்.

கௌரவ அமைச்சர் அவர்கள் தனது விஜயத்தின் போது உதவித்திட்ட ஆவணம் வழங்கும் வைபவத்திற்குத் தலைமை தாங்குவார். இரண்டாவது இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் தலா 5,50,000 இலங்கை ரூபா பெறுமதியான பண உதவியை இந்திய அரசிடமிருந்து பெற்று வீடுகளைக் கட்டி முடித்தவர்களில் சிலருக்கு வைபவத்தின்போது ஆவணங்களைக் கையளிப்பார். போரின்போது பாதிக்கப்பட்ட சிறிய வியாபார நிலைய உரிமையாளர்கள் சிலருக்கும் இவ்வைபவத்தில் ஆவணங்களைக் கையளிப்பார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மிகச்சிறிய மற்றும் சிறிய தொழில் முனைவோரில் 1230 பயனாளிகளுக்கு இந்திய அரசின் நிதியுதவிகள் இலங்கை ரூபா 25,000 முதல் 200,000 வரையான பண உதவி வழங்கப்படுகிறது. மொத்தமாக 91 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான பண உதவி வழங்கப்படுகிறது.

கௌரவ அமைச்சர் அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு வழியாக இந்தியா திரும்புகிறார்.

யாழ்ப்பாணம்

05.10.2013